106 ஆவது

அரியாலை சுதேசிய திருநாட் கொண்டாட்ட விழா மலர்



2025

நினைவேந்தலும் கலாசார விழாவும்

12.04.2025 (சனிக்கிழமை) இரவு 07.00 மணி
அரியாலை சனசமூக நிலைய காசிப்பிள்ளை அரங்கு

விளையாட்டுப்போட்டி

14.04.2025 (திங்கட்கிழமை) விசுவாவசு வருடப்பிறப்பன்று
பகல் 01.30 மணி
அரியாலை சனசமூக நிலைய விளையாட்டு மைதானம்

கலை விழா

14.04.2025 (திங்கட்கிழமை) விசுவாவசு வருடப்பிறப்பன்று
இரவு 07.30 மணி
அரியாலை சரஸ்வதி சனசமூக நிலைய விஸ்வநாதன் கலை அரங்கு

106 ஆவது

அரியாலை சுதேசிய திருநாட் கொண்டாட்ட விழா மலர்



2025

உ

சிவமயம்



தேவாரம்

திருச்சிற்றம்பலம்

சொற்றுணை வேதியன் சோதி வானவன்
பொற்றுணைத் திருந்தடி பொருந்தக் கைதொழக்
கற்றுணைப் பூட்டியோர் கடலிற் பாய்ச்சினும்
நற்றுணை யாவது நமச்சி வாயவே.

திருச்சிற்றம்பலம்



சுதேசிய கீதம்

பெருக இன்பம் பெருகும் - நம்
அரியா லையம்பதிப் பெருநாள்
வருக நல் வளமுடன் - வையகத்தின்
பாரிய சுதேசியத் திருநாள்

சித்திரைத் தீந்தமிழ் நாள் - தமிழர்கள்
சிந்தை குளிர்ந்திடும் நாள்
நித்திய மேன இன்ப நினைவினிலே
நீந்திடும் சார்ந்த திருநாள்

ஆண்டு புதிதொன்று - பிறந்ததென
ஆனந்தம் பொங்கிடும் பொன்னாள்
யாண்டும் எதன்மிசையும் - கருணையின்
ஈரம் பயின்றிடும் நாள்

இன்பப் புதுத் திருநாள் - இனிமை
ஏறும் பொது திருநாள்
அன்புக் கனி பிழிந்தே - அழகினில்
ஆடிக் களித்திடும் நாள்

காலையினில் ஊறிடும் நாள் உடல்
கலையினில் தேறிடும் நாள்
சிலையென இருந்தே தீந்தமிழ் - அன்னை
வென்று சிரித்திடும் நாள்.

அரியாலையூர் கவிஞர்
வே. ஐயாத்துரை



106ஆவது அரியாலை சுதேசிய திருநாட் கொண்டாட்ட விழா

நிர்வாக சபை - 2025

தலைவர்	: திரு. த. ஹரிசான்ந்
கௌரவ செயலாளர்	: திரு. வை. கிருபாகரன்
கௌரவ பொருளாளர்	: திரு. ம. மதன்
சிரேஷ்ட தலைவர்	: திரு. கி. அதிகரன்
கலைத் தலைவர்	: திரு. சூ. அகிலன்
விளையாட்டுத் தலைவர்	: திரு. ந. சுதேஸ்குமார்
கலைச் செயலாளர்	: திருமதி சி. பிரணவநாதன்
விளையாட்டுச் செயலாளர்	: திரு. த. பிரணவராவ்
கலைப் பொருளாளர்	: திருமதி. ச. அருண்பாபு
விளையாட்டுப் பொருளாளர்	: திரு. ர. சஞ்சீவன்
மலர்க்குழுப் பொறுப்பாளர்	: திரு. சு. சண்முகரட்ணம்
நாடகப் பொறுப்பாளர்	: திரு. கோ. மதனகோபன்

நிர்வாக சபை உறுப்பினர்கள் (கலை)

திருமதி. சா. விக்னேஸ்வரன்
திரு. ல. கலைச்செல்வன்
திருமதி வி. பிரபு
திருமதி உ. சந்திரமோகன்
திரு. கு. பிரதீபன்

நிர்வாக சபை உறுப்பினர்கள் (விளையாட்டு)

திரு. த. லிங்கேஸ்வரன்
செல்வி கே. கீர்த்திகா
திருமதி மி. குகதாஸ்

நிர்வாக சபை உறுப்பினர்கள் (மலர்)

திரு. பூ. குகதாசன்
திரு. ஜெ. ஜசிந்தன்

கௌரவ கணக்காய்வாளர்

திரு. பொ. நடராசா

106ஆவது அரியாலை சுதேசிய திருநாட் கொண்டாட்ட விழா - 2025
நிர்வாகசபை உறுப்பினர்கள்



இருப்போர் (இடமிருந்து வலம்) : திருமதி உ. சந்திரமோகன், திரு. கி. அதிகரன் (சிரேஸ்ட தலைவர்), திரு. ந. சுதேஸ்குமார் (விளையாட்டுத்தலைவர்), திரு. பூ. குகதாசன், திரு. வை. கிருபாகரன் (கௌரவ செயலாளர்), திரு. த. ஹரிஷான்ந் (தலைவர்), திரு.ம.மதன் (பொருளாளர்), திரு. சு. சண்முகரட்ணம் (மலர்க்குழுப் பொறுப்பாளர்), திரு. கூ. அகிலன் (கலைத் தலைவர்), திருமதி சி. பிரணவநாதன் (கலைச் செயலாளர்)

நிற்போர் (இடமிருந்து வலம்) : திருமதி. ச. விக்னேஸ்வரன், திருமதி மி.குகதாஸ், திரு.ர.சஞ்சீவன் (விளையாட்டுப் பொருளாளர்), திரு.த.லிங்கேஸ்வரன், திரு. கோ. மதனகோபன் (நாடகப் பொறுப்பாளர்) திரு. ஜெ. ஜசிந்தன், திரு. த. பிரணவராவ் (விளையாட்டுச் செயலாளர்), திரு. ல. கலைச்செல்வன், திருமதி வி. பிரபு, திருமதி ச. அருண்பாபு (கலைப்பொருளாளர்)

புகைப்படத்திற்கு சமுகமளிக்காதோர் : திரு.கு.பிரதீபன், செல்வி கே.கீர்த்திகா

ஆசிச் செய்தி



ஊருக்குப் பெருமை சேர்ப்பன ஆலயங்கள், கல்விக் கூடங்கள், அறப்பணி நிலையங்கள், இயற்கை வளங்கள் என்பனவாகும். சிறந்த அறிவுத்திறன், நல்ல மனப்பாங்கு, உளவிருத்தி என்பவற்றினூடாக ஆளுமை விருத்தியை ஏற்படுத்தும் ஒரு பெருவிழாவாக அரியாலை சுதேசிய திருநாட் கொண்டாட்ட விழா வருடாவருடம் கொண்டாடப்பட்டு வருகின்றது.

நூற்றாண்டு கடந்து 106ஆவது விழா கொண்டாடப்படும் இவ்வேளையில் மலரினை வெளியிடுகின்றமை கண்டு அகமகிழ்சி அடைவதுடன் வாழ்த்தி வரவேற்கின்றேன்.

இம்மலர் ஒற்றுமையின் பெறுமானத்தை எடுத்துக் காட்டுவதுடன் பல தசாப்தங்கள் நிலைத்திருந்த எம் முன்னோர்களுடைய சேவைகளைப் பரம்பரை பரம்பரையாக எடுத்துரைக்கிறது. அரியாலை சுதேசிய திருநாட்கொண்டாட்ட விழா எதிர்காலச் சந்ததியினரை நற்பிரஜைகளாக உருவாக்கும் என்பதில் ஐயமில்லை. அதற்கு இம் மலர் உறுதுணையாக இருக்குமென நம்புகிறேன். மனித வாழ்வின் மலர்ச்சிக்கும், நிலையான முன்னேற்றத்திற்கும் ஆன்ம ஈடேற்றத்திற்குமான வாழ்வியல் நடைமுறைகளைப் பேணிப் பாதுகாத்துக் கையளிக்கின்ற அளப்பெரிய கைங்கரியங்களை அரியாலை சுதேசிய திருநாட் கொண்டாட்ட விழா மேற்கொண்டு வருகின்றது. இச் சுதேசிய திருநாட் கொண்டாட்ட விழாவானது நூற்றாண்டு கடந்து தான் சார்ந்த சமூகத்தின் மேம்பாட்டுக்கு நம்பிக்கை நட்சத்திரமாகச் சுடர்விட்டுப் பிரகாசித்து வருகிறது.

இப்பொன்னான தருணத்தில் 106ஆவது விழா மகிழ்வுடன் நடைபெறவும், இந் நூல் வெளியீடு சிறப்புறவும் எல்லாம் வல்ல அரியாலை நீர்நொச்சித்தாழ்வு ஸ்ரீ சித்தி விநாயகரின் பாதம் பணிந்து எனது ஆசிகளை வழங்கி அகமகிழ்கின்றேன்.

பிரம்மஸ்ரீ சு.முரளீதரக் குருக்கள்
பிரதம குரு,
அரியாலை நீர்நொச்சித்தாழ்வு,
ஸ்ரீ சித்திவிநாயகர் தேவஸ்தானம்.

தலைவரின் வாழ்த்துச் செய்தி



வருடாவருடம் சித்திரைப் புதுவருடப்பிறப்பன்று அரியாலை மக்களால் கொண்டாடப்பட்டு வரும் அரியாலை சுதேசிய திருநாட் கொண்டாட்ட விழா இம் முறை 106 வருடங்களை எட்டி நிற்கிறது. வருடப்பிறப்பு கொண்டாட்டம், சித்திரைப் பெருவிழா என்று பரவலாக அறியப்படும் எமது "அரியாலை சுதேசிய திருநாள்" என்பது உண்மையில் ஒரு கொண்டாட்டமோ அல்லது விழாவோ அல்ல. அது ஒரு உணர்வு. உதிரத்தோடு கலந்துவிட்ட உணர்வு. நாம் அரியாலையூரவர் என்று பெருமை கொள்ளும் மந்திரச் சொல்லே "சுதேசிய திருநாள்".

இந்தியாவில் மகாத்மா காந்தியினால் ஆரம்பிக்கப்பட்ட சுதேசிய இயக்கம் சேர்.பொன் இராமநாதன் போன்றவர்களால் இலங்கையிலும் முன்னெடுக்கப்பட்டது. இலங்கையில் இயங்கியவர்களில் எம்மூரவரான கனகசேகர கோதண்ட வழிவந்த அப்புக்காத்து ஆறுமுகம் கதிரவேலு முக்கியமானவர். இவரே 1919ம் ஆண்டு அரியாலையில் சுதேசியத்திருநாள் ஆரம்பித்து வைத்தவர். இலங்கை பூராவும் நடைபெற்று வந்த சுதேசிய திருநாளானது இன்று அரியாலையூரவர்களால் மட்டுமே கொண்டாடப்படுவது நாம் அனைவரும் நினைவில் கொள்ளுதல் வேண்டும்.

அரியாலை சுதேசியத் திருநாள் என்பது அரியாலை மக்கள் யாவருக்கும் பொதுவானது. இத் திருநாள் சில தவிர்க்க முடியாத காரணங்களினால் இங்குள்ள பொது அமைப்புக்களின் ஆதிக்கத்திற்கு உட்பட்டிருப்பதால் அமைப்புக்கள் முன்னிறுத்தப்பட்டு சுதேசியம் பின் தள்ளப்பட்டிருப்பதை நான் உணர்கிறேன். சுதேசியத்தின் பின்னடைவை உள்ளூரிலும் வெளிநாடுகளிலும் காணமுடிகிறது. இத் தருணத்தில் நாம் அனைவரும் சுதேசியம் என்ற பதாகையின் கீழ் ஒன்றுபட்ட பலமான சமுதாயத்தை உருவாக உழைக்க வேண்டும் எனக் கேட்டுக்கொள்கின்றேன்.

பெருந்தகைகள் ஆரம்பித்து வைத்த "சுதேசியம்" என்ற இந்த நீண்ட தூர அஞ்சலோட்டத்தில் நானும் சபை உறுப்பினர் நாடகப் பொறுப்பாளர், செயலாளர், பொருளாளர் போன்ற நிலைகள் எடுத்து இன்று தலைவராகியுள்ளேன். பலமான அரியாலையைக் கட்டியெழுப்ப அனைவரையும் இந்த அஞ்சலோட்டத்தில் பங்கு கொள்ளுமாறு அழைக்கிறேன். சுதேசிய தீப ஒளி எம் மனதுகளைக் கிளர்த்தட்டும்.

"வாழ்க அரியாலை வளர்க சுதேசியம்"

நன்றி

திரு.தவநாதன் ஹரிஷான்ந்
தலைவர்
106ஆவது அரியாலை சுதேசிய திருநாட் கொண்டாட்ட விழா

கௌரவ செயலாளரின் வாழ்த்துச் செய்தி



"தமிழன் என்று சொல்லடா தலை நிமிர்ந்து நில்லடா"

என் அன்புக்கும் பெருமதிப்பிற்கும் உரிய அரியாலை ஊர்மக்களுக்கு எனது மனமார்ந்த இனிய புத்தாண்டு நல்வாழ்த்தினைத் தெரிவிப்பதில் மனநிறைவடைகின்றேன்.

ஒரு இனம் தன்னுடைய மொழியினையும் கலாசார பண்பாடுகளையும் இழக்குமாயின் அவ் இனத்தின் இருப்பு கேள்விக்குறியாகும். இதனைக் கருத்தில் கொண்டு தூர நோக்கில் தமிழரின் தேசியத்தினை பாதுகாக்கும் நோக்கோடு உருவாக்கப்பட்ட சுதேசிய திருநாட் கொண்டாட்ட விழா 106 ஆண்டுகள் நிறைவு பெறுவதையிட்டு பெருமகிழ்ச்சி அடைகிறேன்.

சுதேசியம் என்பது ஒற்றுமைபடுத்துகின்ற விழாவாக இருக்க வேண்டும் என்பதுடன் அதனூடாக தமிழரின் தேசிய உணர்வினை ஏற்படுத்தி அனைவரையும் ஒற்றுமைப்படுத்த வேண்டும் என்பதும் எமது எதிர்பார்ப்பாகும். இவ்விழாவில் தமிழரின் சுதேசிய விளையாட்டு, கலை நிகழ்வுகளுக்கு அதிக முக்கியத்துவம் கொடுக்க வேண்டும் என்பது எமது கோரிக்கையாக இருக்கின்றது.

அரியாலை ஊரின் அடையாளத்தில் முக்கியமான நிகழ்வுகளில் ஒன்றான இவ்விழாவினை நடத்துவதையிட்டு பெருமை கொள்வதுடன் மேலும் விழா பல நூற்றாண்டுகளைக் கடந்து தொடர வேண்டுமென வாழ்த்துகின்றேன்.

நாம் என்றும் சுதேசிய உணர்வு மிக்கவராக இருந்து தமிழரின் தேசியத்தினை பேணி பாதுகாப்போம் என்று உறுதி எடுத்துக் கொள்வோம்.

திரு. வைத்திலிங்கம் கிருபாகரன்
கௌரவ பொதுச் செயலாளர்
106ஆவது அரியாலை சுதேசிய திருநாட் கொண்டாட்ட விழா.

கௌரவ பொருளாளரின் உள்ளத்திலிருந்து



எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்தனை செய்து கொண்டு புதிதாகப் பிறக்கும் விசுவாவசு புதுவருட வாழ்த்துக்களை 106 ஆவது அரியாலை சுதேசிய திருநாட் கொண்டாட்ட விழா விசுவாசிகள் அனைவருக்கும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

இவ் விழாவானது எம் முன்னோர்கள் என்ன நோக்கத்திற்காக ஆரம்பித்தார்களோ, அந் நோக்கம் மாறாது தொடர்ந்து இவ்விழா கொண்டாடப்பட வேண்டும் என்பதுடன் கடந்த காலங்களில் எத்தனையோ குழப்பங்கள், யுத்த அழிவுகள் ஏற்பட்ட போதும் தமது பாரம்பரிய தமிழர் கலாசாரத்தை பேணிக் காக்கும் நோக்கத்துடனும் கலையையும் விளையாட்டுக்களையும் அழியவிடாது அவ்வவ் துறையினரின் திறமைகளை வெளிக்காட்டும் முகமாகவும் எம்மூர் மக்கள் யாவரும் ஒற்றுமையாக இவ் விழாவை கொண்டாட வேண்டியது காலத்தின் கட்டாயமாகும்.

இத்தகைய புனிதமான இவ் விழாவினை சிறப்புற நடைபெறுவதற்கு, வாழ்க்கைச் செலவு பல மடங்கு அதிகரித்துள்ள இன்றைய நிலையிலும் கேட்டவுடன் மனமகிழ்வுடன் தாரளமாக நிதி வழங்கிய எம்மூர் மக்களுக்கும், வெளிநாட்டு எம்மூர் மக்களுக்கும், வர்த்தக நிறுவனங்களுக்கும் எம்மூர் அல்லாத விசுவாசிகளுக்கும் மற்றும் நிதி சேகரிக்க உதவிய நிர்வாகசபை உறுப்பினர்களுக்கும் மற்றும் உதவியவர்களுக்கும் எனதும் மற்றும் நிர்வாகசபை சார்பாகவும் மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்ளுகின்றேன்.

திரு. மகேந்திரன் மதன்
கௌரவ பொருளாளர்
106ஆவது அரியாலை சுதேசிய திருநாட் கொண்டாட்டவிழா

106ஆவது அரியாலை சுதேசிய திருநாட் கொண்டாட்ட விழாவில் சிறந்த கல்விமானுக்கான கௌரவம் பெறும் கலாநிதி. மாணிக்கவாசகர் கஜாணன் அவர்கள்



இல.43 பாரதி ஒழுங்கை, கச்சேரி நல்லூர் வீதி, அரியாலையில் வசிக்கும் கலாநிதி மாணிக்கவாசகர் கஜாணன் அவர்கள் தனது ஆரம்பக் கல்வியை யாழ்/ நல்லூர் புனித பெனடிற் றோமன் கத்தோலிக்க வித்தியாலயத்திலும் (தரம் 1 முதல் தரம் 5 வரை) இடைநிலைக் கல்வியை மு/விசுவமடு மகா வித்தியாலத்திலும் (தரம் 6 முதல் தரம் 9 வரை) உயர்தரக் கல்வியை யா/ கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயத்திலும் பயின்றார்.

க.பொ.த உயர்தரப் பரீட்சையில் சித்திபெற்று யாழ் பல்கலைக் கழகத்தின் வவுனியா வளாகத்தில் பிரயோக கணிதம் மற்றும் கணிப்பியல் துறையில் இளங்கலை விஞ்ஞானப் பட்டம் பெற்றார். (B.Sc. hons in Appliedmathematics and computing) 2021 இல் பேராதனைப் பல்கலைக் கழகத்தில் புள்ளியியல் துறையில் தத்துவவியலில் முனைவர் பட்டம் பெற்றார். (Doctor of Philosophy in Statistics)

இவர் உதவி விரிவுரையாளராக வவுனியாப் பல்கலைக்கழகத்தில் தனது கல்விப் பணியைத் தொடங்கி விரிவுரையாளராகவும், மூத்த விரிவுரையாளராகவும் பதவி உயர்வு பெற்று முன்னேறினார். இக்காலத்தில் அவர் 10க்கும் மேற்பட்ட ஆராய்ச்சிக் கட்டுரைகளை வெளியிட்டார். மேலும் தேசிய மற்றும் சர்வதேச மாநாடுகளில் 10க்கும் மேற்பட்ட ஆய்வு விளக்கவுரைகளை நிகழ்த்தினார்.

இவர் தற்போது வவுனியாப் பல்கலைக்கழக பௌதீக விஞ்ஞான துறைத்தலைவராக பதவியுயர்வு பெற்று கடமையாற்றி வருகிறார்.

மேலும் இவர் வவுனியாப் பல்கலைக்கழகத்தில் (2022-2024) ஒழுக்காற்று அதிகாரி (Proctor), ஆகவும் வவுனியா அறிவியல் இதழ் பிரதம ஆசிரியர் (2022-2024) ஆகவும், வவுனியாப் பல்கலைக்கழகத்தின் விளையாட்டு ஆலோசனை சபைத் தலைவராகவும் (2021-2024) வவுனியாப் பல்கலைக்கழக ஆசிரியர் சங்கச் (VUTA) செயலாளராகவும் (2022 -2023) பதவி வகித்துள்ளார்.

இவ்வாறு கல்வியில் சிறந்து விளங்கி அரியாலை அன்னைக்குப் பெருமை சேர்க்கும் **மாணிக்கவாசகர் கஜாணன்** அவர்களை 106ஆவது அரியாலை சுதேசிய திருநாட் கொண்டாட்ட விழாவின் போது ஊர் மக்கள் சார்பாக கௌரவிப்பதில் 106ஆவது அரியாலை சுதேசிய திருநாட் கொண்டாட்ட விழா நிர்வாக சபை பெருமை கொள்வதுடன் பெரும் மகிழ்ச்சியும் அடைகின்றது.

106ஆவது அரியாலை சுதேசிய திருநாட் கொண்டாட்ட விழாவில் விளையாட்டுத் துறையில் கௌரவம் பெறும் திரு. பத்மநாதன் லவேந்திரா அவர்கள்



அமரர் பொன்னையா பத்மநாதன் மற்றும் பத்மநாதன் இந்திராணி தம்பதிகளின் இரண்டாவது புதல்வனாக திரு.ப.லவேந்திரா அவர்கள் அரியாலையில் 1984 ஆம் ஆண்டு பங்குனி மாதம் 08 ஆம் திகதி பிறந்தார்.

இவர் தந்தை மற்றும் மூத்த சகோதரர் அனைவருமே விளையாட்டுத் துறையில் சிறந்து விளங்கினார்கள். இவர் சிறுவயது முதல் மெய்வல்லுனர் மற்றும் துடுப்பாட்டம் ஆகிய துறைகளில் தனது ஆதிக்கத்தினை செலுத்தி வந்துள்ளார்.

தரம் 1 முதல் தரம் 13 வரை சென்.ஜோன்ஸ் கல்லூரியில் கல்வி கற்று தேர்ந்து கல்வியோடு விளையாட்டுத் துறையிலும் பல சாதனைகள் நிகழ்த்தியுள்ளார். இவர் கல்விப் பொதுத் தராதர சாதாரணதரப் பரீட்சையில் 2000ம் ஆண்டிலும் உயர்தரத்தினை 2003 ஆம் ஆண்டிலும் நிறைவு செய்துள்ளார்.

இவரது விளையாட்டுத்துறையின் பதிவுகள்

தடகள போட்டி : கல்லூரி மட்டம்

தடகள விளையாட்டு குழு உறுப்பினராக 1997/ 1998/1999/2000/2001/2002/2003

கிரிக்கட் கல்லூரி

1997, 1998 - 15 வயது கிரிக்கட் அணி வீரர்
1999 - 15 வயது கிரிக்கட் அணித்தலைவர்
2001 - 17 வயது கிரிக்கட் அணி தலைவர் முதல் நிலை அணி பிரதிநிதி - 1999, 2000, 2001
2002 -2003 - அணித்தலைவர்
சமானியன்ஸ் கழக அங்கத்தவர் (1999 முதல் இன்றுவரை)

மாவட்ட மட்டம்

1999 - யாழ் மாவட்ட துடுப்பாட்ட கழக அணி தலைவர் - 15 வயது பிரிவு
2001 - யாழ் மாவட்ட அணி பிரதிநிதித்துவம்
2002 - யாழ் மாவட்ட அணி தலைவர்

மாகாண மட்டம்

19 வயது பிரிவு வடக்கு கிழக்கு மாகாண துடுப்பாட்ட அணி தலைவர்

சிங்கள விளையாட்டுக்கழகம்

பிரிவு III – துடுப்பாட்ட அணி பிரதிநதி 2003/ 2004/2005/2006/2007
பிரிவு II – துடுப்பாட்ட அணி பிரதிநிதி – 2005/2006

ஆர்பிகோ மற்றும் றிச்சாட் பீரிஸ்
மேக்கன்டைல் பிரிவு C – துடுப்பாட்ட அணி 2007
மேக்கன்டைல் பிரிவு D – துடுப்பாட்ட அணி 2009

துடுப்பாட்ட பயிற்சி அனுபவம்
SSC பாடசாலை கிரிக்கட் - பயிற்றுவிப்பாளர் 2008/2009

- 2011 முதல் 2016 மற்றும் 2018 முதல் 2024 சென் ஜோண்ஸ் கல்லூரி பிரதம பயிற்றுவிப்பாளர்.
- 2017- இலங்கை துடுப்பாட்ட யாழ் மாவட்ட பயிற்றுவிப்பாளர்.
- 2024 முதல் இன்று வரை கிளிநொச்சி மாவட்ட துடுப்பாட்ட பயிற்றுவிப்பாளர்.

2010 இல் தரம் I இற்குரிய பயிற்றுவிப்பாளர் சான்றிதழ் - இலங்கை துடுப்பாட்டச் சங்கம் - சர்வதேச துடுப்பாட்ட சபையினால் அங்கீகரிக்கப்பட்டது.

தரம் II இற்குரிய சான்றிதழ் - 2020 இல் இலங்கை துடுப்பாட்டச்சங்கம்

இவ்வாறு விளையாட்டுத் துறையில் சிறந்து விளங்கி அரியாலை அன்னைக்குப் பெருமை சேர்க்கும் **திரு. ப. லவேந்திரா** அவர்களை 106ஆவது அரியாலை சுதேசிய திருநாட் கொண்டாட்ட விழாவின் போது ஊர் மக்கள் சார்பாக கௌரவிப்பதில் 106ஆவது அரியாலை சுதேசிய திருநாட் கொண்டாட்ட விழா நிர்வாக சபை பெருமை கொள்வதுடன் பெரும் மகிழ்ச்சியும் அடைகின்றது.

106 ஆவது அரியாலை சுதேசிய திருநாட் கொண்டாட்ட விழாவில் சிறந்த கலைஞருக்கான கௌரவம் பெறும் பொன்னம்பலம் சிவபாலநாதன் அவர்கள்




குகன் வீதி, அரியாலையைச் சேர்ந்த பொன்னம்பலம் சிவபாலநாதன் அவர்கள் 1963.05.28 அன்று பிறந்தார். தனது ஆரம்பக் கல்வியை யா/ அரியாலை ஸ்ரீ பார்வதி வித்தியாசாலையில் கற்றார். (10ம் வகுப்பு வரை) குடும்ப வறுமை காரணமாக மேற் படிப்பை தொடர முடியவில்லை. திருமணமாக முதல் அதாவது 1990 இற்கு முன்பாக நகைச்சுவை நடிகர் சந்திரகுமாருடன் இணைந்து விளைநிலங்கள், பட்டது போதும், மாப்பிள்ளை மாமா, செத்தவன் சொத்து, மெம்பர் போட்ட பம்பர்க்குண்டு, பைத்தியத்திற்கு வைத்தியம், கனடாவில் கல்யாணம், ஓலை ஓடாகிறது ஆகிய நாடகங்கள் நடிகர் சந்திரகுமாரின் நெறியாள்கையில் அரங்கேற்றப்பட்டு ரசிகர்கள் மத்தியில் பெரும் ஆதரவைப் பெற்றது. அத்தோடு உதயகுமாரின் கதை வசனத்தில் இவர் நடித்த அலங்கோலம், முத்தையன்கட்டில் முத்தையா, சுத்துமாத்து சுந்தரலிங்கம், மற்றும் புராண சரித்திர நாடகங்களான அபூர்வ சிந்தாமணி, வீரமைந்தன், வீரகேசரி மைந்தன் போன்ற நாடகங்களிலும் நடித்துள்ளார். இவை மட்டுமல்லாமல் நகைச்சுவை நடிகரான சந்திரகுமாருடன் இணைந்து வினோத ஆடைப் போட்டியில் பங்குபற்றி அநேகரின் பாராட்டு பெற்றமை குறிப்பிடத்தக்கது.

சில தெருக் கூத்துக்களும், அரியாலை சித்திவிநாயகர் சிவன் வேட்டைத் திருவிழாவின் போது ஒரு குதிரையாக ஆடிய வேட்டைத் திருவிழாவினை இரு குதிரைகளாக மாற்றி அதிலும் பங்குபற்றியமை பக்தர்களிடையே கடும் வரவேற்பைப் பெற்றது.

இவ்வாறு கலைத்துறைக்கு பல சேவைகள் புரிந்த திரு.பொன்னம்பலம் சிவபாலநாதன் அவர்களை கலைத்துறையில் கௌரவிப்பதில் 106 ஆவது அரியாலை சுதேசிய திருநாட் கொண்டாட்ட விழா நிர்வாக சபை பெருமை கொள்வதுடன் பெருமகிழ்ச்சியும் அடைகிறது.

106ஆவது அரியாலை சுதேசிய திருநாட் கொண்டாட்ட விழாவில் சிறந்த சமூக சேவகருக்கான கௌரவம் பெறும் சின்னையா செல்வரெத்தினம் அவர்கள்



1942 ஆம் ஆண்டு ஆடி மாதம் 11 ஆம் திகதி பிறந்த இவர் ஆரம்பக் கல்வியை யா/ நயினாதீவு கணேசா கனிஷ்ட மகா வித்தியாலயத்திலும் இடை நிலைக் கல்வியை யா/நயினாதீவு மகா வித்தியாலயத்திலம் ஆசிரியர் பயிற்சியை கொழும்புத்துறை ஆசிரியர் கலாசாலையிலும் விசேட பயிற்சியை கோப்பாய் ஆசிரியர் கலாசாலையிலும் பெற்று மாத்தளையில் ஆசிரியராக கடமையாற்றினார். பின்பு பிரதேச உரையாளராக மட்டக்களப்பு ஆசிரியர் கலாசாலையில் பயிற்றப்பட்டார்.

பின்பு கண்டி மாவட்ட ஆசிரியர் ஆலோசகராக நியமனம் பெற்று கண்டி மாவட்டத்தில் உள்ள தமிழ், முஸ்லிம் பாடசாலைகளிலும் கடமை ஆற்றினார். பின்பு யாழ்ப்பாணம் வந்து சில காலம் யா/நல்லூர் தெற்கு விக்கினேஸ்வரா வித்தியாலயத்தில் கற்பித்ததுடன் ஆசிரிய ஆலோசகராகவும் கடமையாற்றினார். தொடர்ந்து யாழ் மாவட்ட முழு நேர ஆசிரிய ஆலோசகராக சகல பாடசாலைகளிலும் கற்பித்தல் செயற்பாட்டுக்கு வேண்டிய ஆலோசகராக கடமையாற்றினார். யாழ் மாவட்ட வலயம் ஐந்தாகப் பிரிக்கப்பட்ட போது தீவக வலய உதவி கல்விப் பணிப்பாளராக நியமிக்கப்பட்டு சகல தீவகப் பாடசாலைகளிலும் வேண்டிய செயற்பாடுகளை செயற்படுத்தினார். இந்தக் காலத்தில் சர்வோதய பாடசாலைகளில் கற்பிக்கும் முன்பள்ளி ஆசிரியர்களுக்கும் தொண்டு அடிப்படையில் பல பயிற்சிகளை அளித்து சமூகத்தொண்டு ஆற்றினார்.

அரியாலையில் 1970ம் ஆண்டு தொடக்கம் வசித்தபடியால் அரியாலை சுதேசிய திருநாட் கொண்டாட்ட விழாவில் பலமுறை கலைக்குழுத் தலைவராக சேவையாற்றியுள்ளார். மாணவர்களுக்கான கலைப்போட்டிகள் சிறப்பாக நடைபெற செயற்பட்டார். குறிப்பாக வினாத்தாள் தயாரித்தல், திருத்துதல், மத்தியஸ்தம் போன்ற கடமைகளை இலவசமாக வழங்கி அரியாலை சுதேசிய திருநாட்கொண்டாட்ட விழாவிற்கு அளப்பரிய சேவை புரிந்துள்ளார். மேலும் அயலில் உள்ள ஆலயங்களில் நிர்வாக சபையில் அங்கம் வகித்து திருப்பணிகளை புரிந்து வந்தார்.

இவ்வாறு சமூக சேவைகள் பல புரிந்த திரு. சின்னையா செல்வரெத்தினம் அவர்களை கௌரவிப்பதில் 106ஆவது அரியாலை சுதேசிய திருநாட் கொண்டாட்ட விழா நிர்வாக சபை பெருமை கொள்வதுடன் பெருமகிழ்ச்சியும் அடைகிறது.

2023 (2024) க.பொ.த. உயர்தர பரீட்சையில் 3A பெற்றமைக்காக கௌரவிக்கப்படுவோர்கள்



செல்வன் கணேசதாஸ் கபில்ராஜ்

ஆனந்தன் வடலி வீதி, அரியாலையைச் சேர்ந்த திரு.திருமதி கணேசதாஸ் தம்பதியினரின் புதல்வன் கணேசதாஸ் கபில்ராஜ் நடைபெற்று முடிவடைந்த க.பொ.த உயர்தரப் பரீட்சையில் கணிதப் பிரிவில் 2023 (2024) இல் மூன்று பாடங்களிலும் அதி விஷேட (3A) பெறுபேற்றைப் பெற்று மொறட்டுவ பல்கலைக்கழகத்தின் பொறியியல் பிரிவிற்கு தெரிவு செய்யப்பட்டு அரியாலை அன்னைக்கும் தனது பாடசாலையான St.Patrick's கல்லூரிக்கும், தனது பெற்றோருக்கும், தனது வளர்ப்பு தந்தையான பாட்டன் வே.கந்தராசா அவர்களுக்கும், அரியாலை அபிவிருத்திச் சங்கத்திற்கும் பெருமை சேர்த்துள்ளார். தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் 173 புள்ளிகள் பெற்றதுடன் க.பொ.த சாதாரண தரப் பரீட்சையில் 9A பெறுபேறு பெற்றுள்ளார். மேலும் தரம் 6 தொடக்கம் தரம் 11 வரை தங்கப்பதக்கமும் 2018 இல் கணித ஒலிம்பியாட் போட்டியில் தேசிய ரீதியில் ஆறாவது இடத்தையும் பெற்றவர். 2011 இல் மாகாண மட்ட மெய்வல்லுனர் போட்டிகளில் 4x100m அஞ்சல் ஓட்டத்தில் தங்கப் பதக்கத்தையும் 4x400m அஞ்சல் ஓட்டத்தில் வெள்ளிப் பதக்கத்தையும் பெற்று தேசிய மெய்வல்லுனர் போட்டியில் பங்குபற்றியமையும் குறிப்பிடத்தக்கது. 2023 ஆம் ஆண்டு பாடசாலை இல்ல மெய்வல்லுனர் போட்டியின் போது இல்லத் தலைவராக திகழ்ந்தார்.

அரியாலை அபிவிருத்திச் சங்கத்தின் புலமைப்பரிசில் திட்டத்தின் கீழ் தரம் 5 தொடக்கம் தரம் 13 வரை கல்வி பயின்று அபிவிருத்திச் சங்கத்திற்கு பெருமை தேடித்தந்தவர் என்பதுவும் குறிப்பிடத்தக்கது.

அரியாலை சுதேசிய திருநாட்கொண்டாட்ட விழாக்களின் போது கலைப் போட்டிகளில் பங்குபற்றி பல தடவை சிறந்த போட்டியாளர் என்ற விருதினையும் பெற்றவர்.

இவர் பல்கலைக்கழகத்தில் பல பட்டங்கள் பெற்று மென்மேலும் கல்வியில் வளரவும் அரியாலை அன்னைக்கு தனது சேவையை வழங்கவும் எல்லாம் வல்ல இறைவன் துணையாக இருக்க வேண்டுவதுடன் 106ஆவது அரியாலை சுதேசிய திருநாட் கொண்டாட்ட விழா நிர்வாகசபை பெருமை கொள்வதுடன் பெருமகிழ்ச்சியும் அடைகின்றது.



செல்வி சங்கவி ஜெயக்குமார்

குறோசெற் ஒழுங்கை அரியாலையைச் சேர்ந்த திரு.திருமதி ஜெயக்குமார் - ஜசிந்தா தம்பதியினரின் புதல்வி சங்கவி ஜெயக்குமார் நடைபெற்று முடிவடைந்த க.பொ.த உயர்தரப் பரீட்சையில் 2023 (2024) வர்த்தக பிரிவில் மூன்று பாடங்களிலும் அதிவிஷேட (3A) சித்திகள் பெற்று யாழ் பல்கலைக்கழக முகாமைத்துவ பீடத்திற்கு தெரிவு செய்யப்பட்டு அரியாலை அன்னைக்கும், தனது பாடசாலையான யாழ்/ இந்து மகளிர் கல்லூரிக்கும் தனது பெற்றோருக்கும் பெருமை சேர்த்துள்ளார்.

க.பொ.த சாதாரணதரத்தில் 6A, 2B, C சித்தி பெற்றுள்ளார். மேலும் கல்லூரியின் மாணவ தலைவியாகவும் (Prefect) பாடசாலை விளையாட்டுப் போட்டிகளிலும் வலைப்பந்தாட்டப் போட்டிகளிலும் பங்குபற்றி பரிசில்கள் பெற்றுள்ளார், அரியாலை சுதேசிய திருநாட் கொண்டாட்ட விழாவின் போதான கலை விளையாட்டுப்போட்டிகளில் பங்குபற்றி பரிசில்கள் பெற்றுள்ளார்.

இவர் பல்கலைக் கழகத்தில் பல பட்டங்கள் பெற்று மென்மேலும் கல்வியில் வளரவும் அரியாலை அன்னைக்கு தனது சேவையை வழங்கவும் எல்லாம் வல்ல இறைவன் துணையாக இருக்க வேண்டுவதுடன் 106 ஆவது அரியாலை சுதேசிய திருநாட்கொண்டாட்ட விழா நிர்வாகசபை பெருமை கொள்வதுடன் பெரும் மகிழ்ச்சியும் அடைகின்றது.

2023 (2024) க.பொ.த. சாதாரரண தரப் பரீட்சையில் 9A பெற்றமைக்காக கௌரவிக்கப்படுவோர்கள்



செல்வி றஜீபன் அபிநயா

கச்சேரி நல்லூர் வீதி, அரியாலையைச் சேர்ந்த திரு.திருமதி றஜீபன் - தர்மினி தம்பதியினரின் ஏகபுதல்வி றஜீபன் அபிநயா நடைபெற்று முடிவடைந்த க.பொ.த.சாதாரணதரப் பரீட்சையில் 2023 (2024) இல் ஒன்பது பாடங்கிலும் அதிவிஷேட பெறுபேறு (9A) பெற்று அரியாலை அன்னைக்கும், தனது பாடசாலையான யாழ்/வேம்படி மகளிர் கல்லூரிக்கும், பெற்றோருக்கும் பெருமை சேர்த்துள்ளார்.

தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் 167 புள்ளிகளைப் பெற்று சித்தியடைந்து பெற்றோருக்கும், ஊருக்கும் தனது பாடசாலைக்கும் பெருமை சேர்த்தவர். மேலும் கலாசார அமைச்சின் அரச நடனப் போட்டியில் இருதடவைகள் தேசிய ரீதியாக முதன்மை இடம் பெற்றவர். அகில இலங்கை தமிழ்த்தினப் போட்டியில் நாட்டிய நாடகம் உட்பட தனிநடனத்தில் 3 தேசிய விருதைப் பெற்றவர். அகில இலங்கை தமிழ்மொழித்தினப் போட்டியில் பேச்சில் ஒரு தேசிய விருதையும் மனிதவலு திணைக்களம் நடத்திய தேசிய பேச்சுப் போட்டியில் முதன்மை இடமும் பெற்றவர்.

மொறட்டுவ பல்கலைக்கழகம் நடத்திய சொற்கணைப் போட்டியில் பங்குபற்றி வெற்றி பெற்றவர். இலங்கையில் 7 தேசிய விருதைப் பெற்ற இவர் சர்வதேச ரீதியாக இந்திய குமரக்கோட்ட கம்பன் கழகம் நடத்திய பேச்சுப் போட்டியிலும் பங்குபற்றி வெற்றியடைந்தவர்.

இவர் 2013 ஆம் ஆண்டு தொடங்கி அரியாலை சுதேசிய திருநாட் கொண்டாட்ட விழா கலைப் போட்டிகளில் பங்குபற்றி தனிநடனத்தில் தொடர்ந்தும் முதன்மை இடத்தைப் பெற்றவர். அதே போன்று கவிதை, தமிழ், ஆங்கிலம் பேச்சுப் போட்டிகளிலும் பங்குபற்றி முதன்மை இடம் பெறுபவர். தனிநடனம், குழுநடனம் ஆற்றுகைகளை அரியாலை சுதேசிய திருநாட் கொண்டாட்ட விழா நிகழ்வுகளில் மேடை ஆற்றுகை செய்தவர்.

இவர் தொடர்ந்து கல்வியில் சிறந்து க.பொ.த உயர்தரப் பரீட்சையில் சிறந்த பெறுபேறுகளைப் பெற்று பல்கலைக்கழகத்தில் பல பட்டங்களைப் பெற்று மேன்மேலும் கல்வியில்

வளர எல்லாம் வல்ல இறைவன் துணையாக இருக்க வேண்டுவதுடன் 106 ஆவது அரியாலை சுதேசிய திருநாட் கொண்டாட்ட விழாவின் போது ஊர் மக்கள் சார்பாக கௌரவிப்பதில் 106ஆவது அரியாலை சுதேசிய திருநாட் கொண்டாட்ட விழா நிர்வாகசபை பெருமை கொள்வதுடன் பெரு மகிழ்ச்சியும் அடைகின்றது.



செல்வன் ஆதித்தன் ஜதிக்ஷன்

கலைவாணி வீதி, அரியாலையைச் சேர்ந்த திரு.திருமதி ஆதித்தன் தம்பதியினரின் புதல்வன் ஆதித்தன் ஜதிக்ஷன் நடைபெற்று முடிவடைந்த க.பொ.த சாதாரண தரப் பரீட்சையில் 2023 (2024) ஒன்பது பாடங்களிலும் அதி விஷேட பெறுபேறு (9A) பெற்று அரியாலை அன்னைக்கும், தனது பாடசாலையான யாழ் இந்துக்கல்லூரிக்கும், பெற்றோருக்கும் பெருமை சேர்த்துள்ளார்.

தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் 166 புள்ளிகள் பெற்று வெட்டுப்புள்ளிகளுக்கு மேல் புள்ளி பெற்று சித்தியடைந்தவராக பெற்றோருக்கும், ஊருக்கும், தனது பாடசாலைக்கும் பெருமை சேர்த்துள்ளார். மேலும் பாடசாலையில் நடைபெறும் சகல போட்டிகளிலும் பங்குபற்றி பரிசில்கள் பெற்றுள்ளார்.

இவர் தொடர்ந்து கல்வியில் சிறந்து க.பொ.த உயர்தரப் பரீட்சையில் சிறந்த பெறுபேறுகளைப் பெற்று பல்கலைக்கழகத்தில் பல பட்டங்களைப் பெற்று மென்மேலும் கல்வியில் வளர எல்லாம் வல்ல இறைவன் துணையாக இருக்க வேண்டுவதுடன் 106ஆவது அரியாலை சுதேசிய திருநாட் கொண்டாட்ட விழாவின் போது ஊர் மக்கள் சார்பாக கௌரவிப்பதில் 106ஆவது அரியாலை சுதேசிய திருநாட் கொண்டாட்ட விழா நிர்வாகசபை பெருமை கொள்வதுடன் பெருமகிழ்ச்சியும் அடைகின்றது.



செல்வி தீபன் துளசிகா

புங்கன்குளம் வீதி, அரியாலையைச் சேர்ந்த திரு.திருமதி தீபன் ஜிந்துஷ்யா தம்பதியினரின் புதல்வி தீபன் துளசிகா நடைபெற்று முடிவடைந்த க.பொ.த. சாதாரண தரப் பரீட்சையில் 2023 (2024) ஒன்பது பாடங்களிலும் அதிவிஷேட பெறுபேறு (9A) பெற்று அரியாலை அன்னைக்கும் தனது பாடசாலையான யா/ சுண்டிக்குளி மகளிர் கல்லூரிக்கும் பெற்றோருக்கும் பெருமை சேர்த்துள்ளார்.

தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் 155 புள்ளிகளைப் பெற்று வெட்டுப்புள்ளிக்கு மேல் புள்ளி பெற்று சித்தியடைந்து பெற்றோருக்கும், ஊருக்கும், தனது பாடசாலைக்கும் பெருமை சேர்த்தவர். மேலும் பரத நாட்டியத்திலும் இரண்டாம் தரத்தினை பூர்த்தி செய்ததுடன் தரம் 11 வரை பரதநாட்டியம் கற்றுள்ளார். அத்துடன் பாடசாலையில் இந்து மா மன்ற உறுப்பினராகவும் LEO CLUB உறுப்பினராகவும் இருக்கிறார்.

இவர் தொடர்ந்தும் கல்வியில் சிறந்து க.பொ.த உயர்தரப் பரீட்சையில் சிறந்த பெறுபேறு பெற்று பல்கலைக்கழகத்தில் பல பட்டங்கள் பெற்று, மென்மேலும் வளர எல்லாம் வல்ல இறைவன்

துணையாக இருக்க வேண்டுவதுடன் 106ஆவது அரியாலை சுதேசிய திருநாட் கொண்டாட்ட விழாவின் போது ஊர் மக்கள் சார்பாக கௌரவிப்பதில் 106ஆவது அரியாலை சுதேசிய திருநாட் கொண்டாட்ட விழா நிர்வாக சபை பெருமை கொள்வதுடன் பெருமகிழ்ச்சியும் அடைகின்றது.



செல்வி செந்தூரன் விதுஷிகா

காட்டுக்கந்தோர் ஒழுங்கை சுண்டிக்குளியை சேர்ந்த திரு.திருமதி செந்தூரன் துசியந்தி தம்பதியினரின் புதல்வி செந்தூரன் விதுஷிகா நடைபெற்று முடிவடைந்த க.பொ.த.சாதாரண தரப் பரீட்சையில் 2023 (2024) ஒன்பது பாடங்களிலும் அதி விஷேட பெறுபேறு (9A) பெற்று அரியாலை அன்னைக்கும், தனது பாடசாலையான யா/சுண்டிக்குளி மகளிர் கல்லூரிக்கும், தனது பெற்றோருக்கும் பெருமை சேர்த்துள்ளார்.

தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் 164 புள்ளிகளைப் பெற்று வெட்டுப் புள்ளிக்கு மேல் புள்ளி பெற்று சித்தி அடைந்தவராக பெற்றோருக்கும், ஊருக்கும் தனது பாடசாலைக்கும் பெருமை சேர்த்தவர். இவர் பாடசாலையில் நடைபெறும் தமிழ்த்தின, ஆங்கிலதின போட்டிகளில் பங்குபற்றி பல பரிசில்களைப் பெற்றுள்ளார்.

இவர் தொடர்ந்து கல்வியில் சிறந்து க.பொ.த. உயர்தரப் பரீட்சையில் சிறந்த பெறுபேறுகளை பெற்று பல்கலைக்கழகத்தில் பல பட்டங்கள் பெற்று, மென்மேலும் கல்வியில் வளர எல்லாம் வல்ல இறைவன் துணையாக இருக்க வேண்டுவதுடன் 106ஆவது அரியாலை சுதேசிய திருநாட் கொண்டாட்ட விழாவின் போது ஊர் மக்கள் சார்பாக கௌரவிப்பதில் 106ஆவது அரியாலை சுதேசிய திருநாட் கொண்டாட்ட விழா நிர்வாகசபை பெருமை கொள்வதுடன் பெரு மகிழ்ச்சியும் அடைகின்றது.



செல்வி மருதலிங்கம் தரண்யா

ஆனந்தன் வடலி வீதி, அரியாலையைச் சேர்ந்த திரு. திருமதி மருதலிங்கம் ஷர்மிலா தம்பதியினரின் புதல்வி மருதலிங்கம் தரண்யா நடைபெற்ற முடிவடைந்த க.பொ.த.சாதாரணதரப் பரீட்சையில் 2023 (2024) இல் ஒன்பது பாடங்களிலும் அதிவிஷேட பெறுபேறு (9A) பெற்று அரியாலை அன்னைக்கும், தனது பாடசாலையான யா/ வேம்படி மகளிர் கல்லூரிக்கும், தனது பெற்றோருக்கும் பெருமை சேர்த்துள்ளார்.

தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் 158 புள்ளிகளைப் பெற்று வெட்டுப் புள்ளிக்கு மேல் புள்ளி பெற்று சித்தியடைந்தவர். இப் பரீட்சையின் போது அரியாலை கிழக்கு தமிழ் கலவன் பாடசாலையில் 10 வருடத்திற்குப் பின்பு இவரே தரம் ஐந்து புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்து அப் பாடசாலைக்கும், பெற்றோருக்கும், ஊருக்கும் பெருமை சேர்த்தவர்.

இவர் அரியாலை அபிவிருத்திச் சங்கத்தின் புலமைப்பரிசில் திட்டத்தின் கீழ் தரம் 5 இல் இருந்து கல்வி கற்று வருவது குறிப்பிடத்தக்கது. இவர் பாடசாலை மட்ட தமிழ்த்தினம், ஆங்கில தினப் போட்டிகளில் பங்குபற்றி பரிசில்களை பெற்றுள்ளார். தரம் 4 இல் இருந்து இன்று வரை அரியாலை சுதேசிய திருநாட் கொண்டாட்ட விழாவின் போதான கலைப் போட்டிகளில் பங்குபற்றி பல பரிசில்கள் பெற்றிருப்பது குறிப்பிடத்தக்கது.

இவர் தொடர்ந்தும் கல்வியில் சிறந்து க.பொ.த. உயர்தரப் பரீட்சையில் சிறந்த பெறுபேறுகள் பெற்று பல்கலைக்கழகத்தில் பல பட்டங்கள் பெற்று மென்மேலும் வளர எல்லாம் வல்ல இறைவன் துணையாக இருக்க வேண்டுவதுடன் 106ஆவது அரியாலை சுதேசிய திருநாட் கொண்டாட்ட விழாவின் போது ஊர் மக்கள் சார்பாக கௌரவிப்பதில் 106ஆவது அரியாலை சுதேசிய திருநாட் கொண்டாட்ட விழா நிர்வாகசபை பெருமை கொள்வதுடன் பெரும்மகிழ்ச்சி அடைகின்றது.




செல்வி கஜிலன் குருக்கள் கஜிலா

அரியாலை கிழக்கு அரியாலையைச் சேர்ந்த கஜிலன் குருக்கள் மேனகா தம்பதியினரின் புதல்வி கஜிலன் குருக்கள் கஜிலா அவர்கள் நடைபெற்று முடிவடைந்த க.பொ.த சாதாரண தரப் பரீட்சையில் 2023 (2024) ஒன்பது பாடங்களிலும் அதி விஷேட பெறுபேறு (9A) பெற்று அரியாலை அன்னைக்கும், தனது பாடசாலையான யாழ் இந்து மகளிர் கல்லூரிக்கும், பெற்றோருக்கும் பெருமை சேர்த்துள்ளார்.

தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் 155 புள்ளிகள் பெற்று வெட்டுப்புள்ளிக்கு மேல் புள்ளி பெற்று பெற்றோருக்கும், ஊருக்கும், தனது பாடசாலைக்கும் பெருமை சேர்த்துள்ளார். மேலும் பாடசாலையில் நடைபெறும் சகல போட்டிகளிலும் இவர் பங்குபற்றி பரிசில்கள் பெற்றுள்ளார்.

இவர் தொடர்ந்து கல்வியில் சிறந்து க.பொ.த உயர்தரப் பரீட்சையில் சிறந்த பெறுபெறுகளைப் பெற்று பல்கலைக்கழகத்தில் பல பட்டங்களைப் பெற்று மென்மேலும் கல்வியில் வளர எல்லாம் வல்ல இறைவன் துணையாக இருக்க வேண்டுவதுடன் 106ஆவது அரியாலை சுதேசிய திருநாட் கொண்டாட்ட விழாவின் போது ஊர் மக்கள் சார்பாக கௌரவிப்பதில் 106ஆவது அரியாலை சுதேசிய திருநாட் கொண்டாட்ட விழா நிர்வாகசபை பெருமை கொள்வதுடன் பெருமகிழ்ச்சியும் அடைகின்றது.



விசுவாவசு புதுவருடப்பிறப்பன்று (14.04.2025) திங்கட்கிழமை நடைபெறும் விளையாட்டுப் போட்டிகளுக்கான அனுசரணையாளர்கள்

போட்டி	ஞாபகார்த்தமாக	அனுசரணையாளர்
1. 100மீ ஓட்டம் - உள்ளூர் 13 வயதின் கீழ் (ஆண்)	அமரர் குகதாசன் தபேந்திரன்	டிசாந்தி தபேந்திரன் நோர்வே
2. 100மீ ஓட்டம் - உள்ளூர் 13 வயதின் கீழ் (பெண்)	அமரர் பொ.தவநாதன்	திரு.த. ஹரிஷான்ந் 85/3 நாவலர் வீதி, அரியாலை.
3. 100மீ ஓட்டம் - 16 வயதின் கீழ் (ஆண்)	அமரர் கந்தையா கனகசபை	திரு. க.மோகனதாஸ் 485, கண்டி வீதி, அரியாலை.
4. 100மீ ஓட்டம் 16 வயதின் கீழ் (பெண்)	அமரர் சோமசுந்தரம் (கட்டைச்சோமு), மலர்	திருமதி S.வினோதினி கச்சேரி கிழக்கு ஒழுங்கை.
5. 100மீ ஓட்டம் 19 வயதின் கீழ் (ஆண்)	அமரர் பொன்னையா பத்மநாதன்	திரு. ப.லவேந்திரா 125, ஆனந்தன் வடலி வீதி, அரியாலை.
6. 100மீ ஓட்டம் 19 வயதின் கீழ் (பெண்)		செ.மதியழகன் சந்தனமாதா கோயில் ஒழுங்கை
7. 100மீ ஓட்டம் 19 வயதின் மேல் (ஆண்)	அமரர் சீவரத்தினம் சண்முகலிங்கம்	திருமதி. சண்முகலிங்கம் பரமேஸ்வரி, 402, நாவலர் வீதி, அரியாலை.
8. 100மீ ஓட்டம் 19 வயதின் மேல் (பெண்)	அமரர் சோமசுந்தரம் மலர்	திரு.திருமதி சோ.ரவிச்சந்திரன் அரியாலை.
9. முதியோர் ஓட்டம் (75m) (ஆண்கள்)	அமரர் பொன்னம்பலம் இராஜரத்தினம்	திரு.S.பாலச்சந்திரன் 418, நாவலர் வீதி, அரியாலை.
10. முதியோர் ஓட்டம் (50m) (பெண்கள்)		திரு.த.யோகராசா (பச்சடி) திருமகள் வீதி, அரியாலை.
11. தடை ஓட்டம் ஆண்கள் (பொது)	அமரர்கள் சோமசுந்தரம் உதயராசா, நவம்	திரு.உ.தர்மேந்திரன் 10, பொன்னம்பலம் வீதி,
12. 1500மீ ஓட்டம் ஆண்கள் (பொது)	அமரர்கள் சுந்தரலிங்கம் சரோஜினி	S.சிவசங்கர் குடும்பம் 150 நெடுங்குளம் வீதி.
13. விநோத ஆடைப்போட்டி 16 வயதின் கீழ்	அமரர் சீவரத்தினம் புஸ்பேந்திரா	திரு. நேதாஜி நடராஜா நோர்வே

போட்டி	ஞாபகார்த்தமாக	அனுசரணையாளர்
14. விநோத ஆடைப்போட்டி (16 வயதின் மேல்)	அமரர்கள் திரு. திருமதி பரஞ்சோதி	திரு. உமேஷ் பரஞ்சோதி (நோர்வே)
15. விநோத ஆடைப்போட்டி (பாலர்)	அமரர் சீவரத்தினம் புஸ்பேந்திரா	திரு. நேதாஜி நடராஜா (நோர்வே)
16. 50 மீ ஓட்டம் - உள்ளூர் (16 வயதின் கீழ்) ஆண்	அமரர் T.தர்மேந்திரன்	குடும்பத்தினர் கதிரவேலு ஒழுங்கை அரியாலை
17. 50மீ ஓட்டம் - உள்ளூர் 10 வயதின் கீழ் (பெண்)		ஜனனி சுரேந்தர் 118/11, திருமகள் வீதி, அரியாலை.
18. வழுமரம் ஏறுதல்-பொது உள்ளூர் (ஆண்)	அமரர் S. வாமசிவன்	திருமதி. மாலதி வாமசிவன் ஆ.வடலி வீதி.
19. தலையணைச்சண்டை பொது உள்ளூர் (ஆண்)	அமரர் பொ.அருளம்பலம் அ.சபேசன், த.பாலகுமாரன்	பொ.அருளம்பலம் குடும்பம் 458, கண்டிவீதி, அரியாலை.
20. பாலர் ஓட்டம் 5 வயதின் கீழ் (100 பிள்ளைகள்)		திரு.அருளம்பலம் சிவபாலன் U.K
21. சிம்மாசன ஓட்டம்-(ஆண்)	அமரர் S.வாமசிவன்	திருமதி மாலதி வாமசிவன் ஆ.வடலி வீதி.
22. எலி ஓட்டம்- (ஆண்)		திரு. நிஷாந்தன் வைரவர் கோயில் வீதி, அரியாலை.
23. சமநிலை ஓட்டம் (பெண்)	அமரர்கள் செ. நாகேஸ்வரி க.செந்தில்வேல்	திரு. S. விக்னேஸ்வரன் 360, ஆனந்தன் வடலி வீதி, அரியாலை.
24. மெதுவான சைக்கிளோட்டம் (75m - ஆண்) பொது	அமரர் பொ.தவநாதன்	திரு. த. ஹரிசான்ந் 85/3, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.
25. மெதுவான சைக்கிளோட்டம் (75m - பெண்) பொது		திரு. வி.மதனன் 5/1, புறூடி லேன், அரியாலை.
26. முட்டியடித்தல் ஆண்கள் (பொது)		திருமதி சாயங்கி குலசிங்கம் நோர்வே

போட்டி	ஞாபகார்த்தமாக	அனுசரணையாளர்
27. 4x100 m **அஞ்சலோட்டம்** பெண் (பொது)	அமரர் சிவம் நவரத்தனம்	திரு. ஸ்ரீ நவரத்தினம் நோர்வே
28. 4x200 m **அஞ்சலோட்டம்** ஆண் (பொது)		Dr. M. தெய்வேந்திரா லண்டன்
29. **சங்கீதக்கதிரை** - பெண் (12வயதின் கீழ்) உள்ளூர்	பரமசாமி கனகம்மா	திரு. ப. துரைராஜா, கண்டிவீதி, அரியாலை.
30. **சங்கீதக்கதிரை** - பெண் (13வயதின் மேல்) உள்ளூர்		திரு. தி.கிரிதரமோகன் லண்டன்
31. **சங்கீதக்கதிரை** - பெண் (திருமணமானவர்கள்)	அமரர் ரஞ்சி பாலசுப்பிரமணியம்	செல்வி சதாசிவம் பொன்மதி (புஸ்பம்)
32. **கயிறிழுத்தல்** - பெண் (யுவதிகள் எதிர் திருமணமானவர்கள்)	அமரர் குணசேகரம்	திரு.கு.பாஸ்கரன் 23, கனகரத்தினம் வீதி. அரியாலை.
33. **கயிறிழுத்தல்** - ஆண் (இளைஞர்கள் எதிர் திருமணமானவர்கள்)	அமரர்கள் வைரமுத்து சின்னத்துரை (கிளி) முத்தம்மா	திருமதி சி.விமலராணி 10/2, நடுத்தெரு ஒழுங்கை, அரியாலை.

விசேட அனுசரணையாளர்கள்

- விழா அலங்கரிப்பு - இங்கிலாந்துவாழ் அரியாலை மக்கள்.
- விழா உபசரணை - கனடாவாழ் அரியாலை மக்கள்.
- விழா ஒளி - நோர்வே வாழ் அரியாலை மக்கள்
- விழா ஒலி - ஜேர்மன் வாழ் அரியாலை நண்பர்கள் (சுப்பிரமணியம் கணேசதாஸ், தாமோதரம்பிள்ளை நகுலேஸ்வரன்)
- விழாவின் பிரமாண்ட படைப்பான நாடகம் - திரு.திருமதி M.A.ஸ்ரீராஜலிங்கம் மேகலா (தகவல் தொழில்நுட்பவியலாளர், ஆஸ்திரேலியா வாழ் அரியாலை விசுவாசி)
- தூபி பராமரிப்பு - சர்வதேச அரியாலை சமூக அபிவிருத்தி சங்கம் (ஐக்கிய இராச்சியம்)

106ஆவது அரியாலை சுதேசிய திருநாட் கொண்டாட்ட விழா முன்னோடி விளையாட்டுப் போட்டிகளுக்கான அனுசரணையாளர்கள்

போட்டி	ஞாபகார்த்தமாக	அனுசரணையாளர்
1. **விசேட சைக்கிளோட்டம்**	அமரர் குகதாசன் தபேந்திரன்	திருமதி தபேந்திரன் மேகலா நோர்வே
2. **15 கி.மீ வீதியோட்டம்** உள்ளூர் (ஆண்)		நியூ லக்கி ஹாட்வெயார் கண்டி வீதி, அரியாலை
3. **10 கி.மீ வீதியோட்டம்** உள்ளூர் (பெண்)		திரு.திருமதி வசந்தி குணசேனா U.K
4. **25கி.மீ சைக்கிளோட்டம்** உள்ளூர் (ஆண்)		திரு. அ.பரமராஜா சித்திவிநாயகர் கோயில் வீதி,
5. **15கி.மீ சைக்கிளோட்டம்** உள்ளூர் (பெண்)		திருமதி நளாயினி குகநாதன்
6. **துடுப்பாட்டம்** (மென்பந்து) - ஆண்	அமரர் சுப்பையா தேவராஜா	திரு. திருமதி சுபகுமார் மனோரஞ்சினி U.K
7. **கரபந்தாட்டம்** (ஓவர்கேம்) - ஆண்		திரு. கஜன் மகாதேவன் U.K
8. **கரபந்தாட்டம்** (செற்றப்) - ஆண்	அமரர் தம்பிப்பிள்ளை சூடாமணி	திரு. திருமதி கிருஷ்னாலினி அகிலன்
9. **வலைப்பந்தாட்டம் (பெண்)**	-	திருமதி செ.அம்பிகா இல. 28, குரோசெற் வீதி, யாழ்ப்பாணம்.
10. **கிளித்தட்டு (ஆண்)**	அமரர் தர்மலிங்கம் தர்மேந்திரன்	குடும்பத்தினர் கதிரவேலு ஒழுங்கை, அரியாலை
11. **கிளித்தட்டு (பெண்)**	அமரர் செல்லையா அருளம்பலம்	திரு.அருளம்பலம் ஜெயபாலன் 588/2, நாவலர் வீதி.
12. **கெந்தியடித்தல் (ஆண்)**		திரு.செ.பத்மநாதன் 136, ஆனந்தன் வடலி வீதி,
13. **கெந்தியடித்தல்**		திரு. ச. கிரிதரமோகன் லண்டன்

போட்டி	ஞாபகார்த்தமாக	அனுசரணையாளர்
14. கயிறு இழுத்தல் (ஆண்)		Ariyalai.Com சார்பாக சண் ரமேஷ், ஜெ.ஜசிந்தன் 004790192579 / 0094776544595
15. கயிறு இழுத்தல் (பெண்)	அமரர் ஸ்ரீரஞ்சினி ஆனந்தகுமாரசாமி	திரு.M.ஆனந்தகுமாரசாமி 36/1B,காட்டுக்கந்தேர் ஒழுங்கை.
16. போர்த்தேங்காய் அடித்தல்	அமரர்கள் V.K.சண்முகலிங்கம் லலிதா	குடும்பத்தினர் 125, திருமகள் வீதி, அரியாலை.
17. பூப்பந்தாட்டம் (ஆண்)		திரு. இராசா ஜயூரன் இலந்தைக்குளம் வீதி.
18. பூப்பந்தாட்டம் (பெண்)	அமரர் பொன்னம்பலம் அருளம்பலம்	இராதை அரியாலை கண்டி வீதி, சுண்டிக்குளி.
19. உதைபந்தாட்டம்		திருமதி. லோகினி கணேசரட்ணம் U.K
20. மேசைப்பந்து (ஆண்)	அமரர் S. சேதுராஜா	திரு. செ. நிருபரன் 22 பாரதி வீதி, அரியாலை
21. மேசைப்பந்து (பெண்)		திரு.T. செல்வரட்ணம் ஆ.வடலி வீதி (லண்டன்)
22. கரம் (ஆண்)		திரு.த.லோகநாதன் கலைமகள் வீதி, அரியாலை.
23. கரம் (பெண்)		திரு. M. அரவிந்தன் திருமகள் வீதி, அரியாலை.
24. சதுரங்கம் (ஆண்)		திரு. இ. இராஜ்குமார் 11/5 கண்டி வீதி, அரியாலை.
25. சதுரங்கம் (பெண்)		திரு. S. அரவிந்தன் 11, கண்டி வீதி, அரியாலை.

106 ஆவது அரியாலை சுதேசிய திருநாட் கொண்டாட்ட விழா முன்னோடிக் கலைப் போட்டிகளுக்கான அனுசரணையாளர்கள்

போட்டி	ஞாபகார்த்தமாக	அனுசரணையாளர்
1. மொழித்திறன் (தமிழ்) ஆரம்ப கனிஸ்ர பிரிவு		திரு S. செல்வராஜா இலந்தைக்குளம் வீதி, அரியாலை.
2. மொழித்திறன் (தமிழ்) ஆரம்ப சிரேஷ்ட பிரிவு	அமரர் சுப்பிரமணியம் பரமசாமி	திரு.ப.துரைராஜா இல.364, கண்டி வீதி, அரியாலை.
3. மொழித்திறன் (தமிழ்) கீழ்ப்பிரிவு	அமரர் S.T. பத்மநாதன்	அமரர் S.T. பத்மநாதன் குடும்பத்தினர் 169, கண்டி வீதி, அரியாலை.
4. மொழித்திறன் (தமிழ்) மத்தியபிரிவு		திருமதி N. சறோஜினி 23, கனகரட்ணம் வீதி, அரியாலை.
5. மொழித்திறன் (தமிழ்) மேற்பிரிவு	அமரர்கள் சுந்தரலிங்கம் சறோஜினி	திருமதி. துளசி சிவசங்கர் 150, நெடுங்குளம் வீதி, அரியாலை.
6. மொழித்திறன் (ஆங்கிலம்) ஆரம்ப கனிஸ்ர பிரிவு	அமரர் நாகலிங்கம் தியாகராஜா	திரு.பத்மநாதன் குடும்பத்தினர் 36/12, ஆ.வடலி வீதி, அரியாலை.
7. மொழித்திறன் (ஆங்கிலம்) ஆரம்ப சிரேஷ்ட பிரிவு	அமரர் S.குருநாதன்	Dr.கு.திருமகள் 30/3, கச்சேரி கிழக்கு ஒழுங்கை, அரியாலை.
8. மொழித்திறன் (ஆங்கிலம்) கீழ்ப்பிரிவு		திரு.ம.கதிர்காமநாதன் 52, கனகரத்தினம் வீதி, அரியாலை.
9. மொழித்திறன் (ஆங்கிலம்) மத்தியபிரிவு	அமரர்கள் சுந்தரலிங்கம் சறோஜினி	திருமதி. துளசி சிவசங்கர் 150, நெடுங்குளம் வீதி, அரியாலை.
10.மொழித்திறன் (ஆங்கிலம்) மேற்பிரிவு		திரு. ச.கிரிதரமோகன் லண்டன்
11.கவிதை (தமிழ்) 16 வயதின் கீழ்		திரு. தி.கிரிதரமோகன் லண்டன்
12.கவிதை (தமிழ்) 16 வயதின் மேல்		திருமதி.S. மாகாலட்சுமி, சித்திவிநாயகர்கோயில் வீதி, அரியாலை.

போட்டி	ஞாபகார்த்தமாக	அனுசரணையாளர்
13.சிறுகதை (தமிழ்) 16 வயதின் கீழ்		திருமதி மைதிலி பிரபாகரன் 5 வேலப்பர் ஒழுங்கை, அரியாலை.
14.சிறுகதை (தமிழ்) 16 வயதின் மேல்		திருமதி மைதிலி பிரபாகரன் 5 வேலப்பர் ஒழுங்கை, அரியாலை.
15.பொதுஅறிவும் விவேகமும் ஆரம்ப கனிஸ்ரபிரிவு	அமரர் செ.கந்தசாமி	குடும்பத்தினர் பொன்னம்பலம் வீதி, அரியாலை
16.பொதுஅறிவும் விவேகமும் ஆரம்ப சிரேஷ்டபிரிவு	அமரர் இ.யசோதரன் (தவில் வித்துவான்)	புதல்வர்கள் (நவரூபன், காண்டீபன்) 156, ஆ.வ. வீதி, அரியாலை
17.பொதுஅறிவும் விவேகமும் கீழ்ப்பிரிவு		திருமதி கு.ஸ்ரீகாந்தி 742, நாவலர் வீதி, அரியாலை.
18.பொதுஅறிவும் விவேகமும் மத்திய பிரிவு		செல்வன் A.சாய்லக்ஷன் 54, ஆட்காட்டி வீதி, அரியாலை.
19.பொதுஅறிவும்விவேகமும் மேற்பிரிவு	அமரர் நா.செல்வராஜா	திரு.க.ஸ்ரீகாந்தன் பொன்னம்பலம் வீதி
20.சமய அறிவும் திருக்குறளும் ஆரம்ப கனிஸ்ர பிரிவு		திரு.ந.சாந்தராஜா 400, நாவலர் வீதி, அரியாலை
21.சமய அறிவும் திருக்குறளும் ஆரம்ப சிரேஷ்ட பிரிவு		திருமதி. ஜனனி சுரேந்தர் 118/1, திருமகள் வீதி, அரியாலை.
22.சமய அறிவும் திருக்குறளும் கீழ்ப்பிரிவு		திரு T. துஷ்யந்தன் 23, குகன் வீதி, அரியாலை.
23.சமய அறிவும் திருக்குறளும் மத்தியபிரிவு	அமரர் க.சண்முகலிங்கம்	திருமதி.த.சண்முகலிங்கம் 132, திருமகள் வீதி, அரியாலை.
24.சமய அறிவும் திருக்குறளும் மேற்பிரிவு	அமரர் ச. உருத்திரேஸ்வரன்	செல்வி சதாசிவம் பொன்மதி 125/2, ஆனந்தன் வடலி வீதி, அரியாலை.
25.சித்திரம் ஆரம்பகனிஸ்ரபிரிவு	அமரர் மு.கனகரட்ணம்	திரு.க.விஜயலட்சுமி 32,திருமகள் வீதி, அரியாலை.

போட்டி	ஞாபகார்த்தமாக	அனுசரணையாளர்
26.சித்திரம் ஆரம்பசிரேஷ்டபிரிவு	அமரர்கள் தம்பிப்பிள்ளை சூடாமணி பத்மா சூடாமணி	திரு. சூடாமணி அகிலன் 205/2, கண்டி வீதி, அரியாலை.
27.சித்திரம் கீழ்பிரிவு		திரு.சபாரட்ணம் வசந்தகுமார் சின்னாலங்கண்டு வீதி, அரியாலை.
28.சித்திரம் மத்தியபிரிவு		திரு. S. தயேஸ்குமார் 36/1, வைரவர் கோயில் வீதி, அரியாலை.
29.சித்திரம் மேற்பிரிவு	அமர் மு.தனபாலசிங்கம்	திரு. தனபாலசிங்கம் சஜீவன் ஆ.வ. வீதி, அரியாலை.
30.ஆக்கத்திறன் ஆரம்ப கனிஸ்ர பிரிவு		திரு. வீரசிங்கம் சஞ்சீவன் வைரவர் கோயில் வீதி, அரியாலை
31.ஆக்கத்திறன் ஆரம்ப சிரேஷ்ட பிரிவு	அமரர்கள் மு.ஐயாத்துரை கோ. கோபாலசிங்கம்	திருமதி பத்மரஞ்சினி கோபாலசிங்கம் 36/1A,காட்டுக்கந்தோர் ஒழுங்கை,
32.ஆக்கத்திறன் கீழ்ப் பிரிவு	அமரர் இரத்தினசபாபதி தவபாலன்	Dr..தவபாலன் செஷானந் 85/9, ஆனந்தன் வடலி வீதி, அரியாலை
33.ஆக்கத்திறன் மத்திய பிரிவு	அமரர்கள் க.குணரத்தினம் கு.யோகநாதன்	கு.பிரதீபன் AAC, 66,வைரவர் கோயில் வீதி, அரியாலை.
34.ஆக்கத்திறன் மேற்பிரிவு		திரு. உ.செந்தூரன் நாவலர் வீதி, அரியாலை.
35.கட்டுரை (தமிழ்) ஆரம்ப கனிஸ்ரபிரிவு	அமரர்கள் சுப்பையா செல்லம்மா	திரு.சு.சண்முகரட்ணம் காட்டுக்கந்தோர் ஒழுங்கை.
36.கட்டுரை (தமிழ்) ஆரம்ப சிரேஷ்டபிரிவு		செல்வி லோகநாத் எசானிக்கா திருமகள் வீதி, அரியாலை
37.கட்டுரை (தமிழ்) கீழ்ப்பிரிவு	அமரர் க. பிரபாவதி	திரு.S.கமலநாதன் 41, காட்டுக்கந்தோர் ஒழுங்கை, சுண்டிக்குளி.
38.கட்டுரை (தமிழ்) மத்தியபிரிவு	அமரர்கள் மு.ஐயாத்துரை கோ. கோபாலசிங்கம்	திருமதி பத்மரஞ்சினி கோபாலசிங்கம் 36/1A,காட்டுக்கந்தோர் ஒழுங்கை.

போட்டி	ஞாபகார்த்தமாக	அனுசரணையாளர்
39.கட்டுரை (தமிழ்) மேற்பிரிவு	அமரர்கள் சபாரத்தினம் இரத்தினம்மா	செல்வி த.மதுராங்கனி 443/6, கண்டி வீதி, அரியாலை.
40.கட்டுரை (ஆங்கிலம்) ஆரம்ப கனிஸ்ரபிரிவு	அமரர் கோபாலசிங்கம் புவனேஸ்வரி	திருமதி மோகனதாஸ் நந்தினி 485, கண்டி வீதி, அரியாலை.
41.கட்டுரை (ஆங்கிலம்) ஆரம்ப சிரேஷ்டபிரிவு		திரு. முருகேசு மாணிக்கவாசகர் 43, பாரதி வீதி, அரியாலை.
42.கட்டுரை (ஆங்கிலம்) கீழ்ப்பிரிவு	அமரர் தியாகராசா விசுவலிங்கம்	V. சுதாகர் காட்டுக்கந்தோர் ஒழுங்கை, சுண்டிக்குளி
43.கட்டுரை (ஆங்கிலம்) மத்தியபிரிவு	அமரர் பாக்கியலட்சுமி சிவலிங்கம்	குடும்பத்தினர் 18, இலந்தைக்குளம் வீதி.
44.கட்டுரை (ஆங்கிலம்) மேற்பிரிவு	அமரர் சுந்தரலிங்கம்	திருமதி சு. சதாளன் 46, கச்சேரி கிழக்கு ஒழுங்கை, அரியாலை
45.சங்கீதம் ஆரம்ப கனிஸ்ரபிரிவு	அமரர் ஜெயா சந்திரசேகரம்	திரு.ம.சந்திரசேகரம் 54/1, விபுலானந்தர் வீதி.
46.சங்கீதம் ஆரம்ப சிரேஷ்டபிரிவு		திருமதி ஆதித்தன் கார்த்திகா ஆ.வ. வீதி, அரியாலை.
